## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 341/2015 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | சுப்ரமணி | நாள் | 08.01.2024 |
| தகப்பனார் பெயர் | அம்மாசி | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை:-**

1) இவ்வழக்கை முதல்முதலில் யார் யார் சேர்ந்து தாக்கல் செய்தோம் என்றால், நானும், பெரியண்ணனும், சேகரும் சேர்ந்து முதன்முதலில் இவ்வழக்கை தாக்கல் செய்தோம். யார் யார் மீது தாக்கல் செய்தோம் என்றால், பழனி, காவேரி, கொழந்தைபையன், ஆறுமுகம், கந்தசாமி, மற்றொரு பழனி ஆகியோர்கள் மீது தாக்கல் செய்தோம்.

2) என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கை நாங்கள் தாக்கல் செய்தோம் என்றால், பிரதிவாதிகள் சொல்வது போல் எந்த வழித்தடமும் இல்லை என சொல்லி இந்த வழக்கை நாங்கள் தாக்கல் செய்தோம். நாங்கள் என்ன பரிகாரம் கேட்டுள்ளோம் என்றால், வேறு எந்த பரிகாரமும் கேட்கவில்லை. இந்த வழக்கிற்கு முன்பே பிரதிவாதிகள், வாதிகள் மீது அ.வ.எண்.194/2013 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். அந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு தாவா சொத்தை வந்து பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்தார் என்றால், சரிதான்.

3) மேற்படி அ.வ.எண்.194/2013 என்ற வழக்கை பிரதிவாதிகள் தாக்கல் செய்த பின்னர், 2 வருடங்கள் கழித்துதான் இந்த வழக்கை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். தற்போது நாங்கள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கின் வழக்குரையில், மேற்படி பிரதிவாதிகள் தாக்கல் செய்த அ.வ.எண்.194/2013 என்ற வழக்கை பற்றியோ, அதன் வழக்குரையையோ, அதற்கு நாங்கள் தாக்கல் செய்திருந்த பதிலுரையை பற்றியோ ஏதேனும் சொல்லியுள்ளோமா என்றால், இல்லை. அதேபோல் நீதிமன்ற ஆணையர் அ.வ.எண்.194/2013 என்ற வழக்கில் தாவா சொத்தை பார்வையிட்டது குறித்து இவ்வழக்கில் சொல்லவில்லை என்றால், சரிதான்.

4)மேற்படி அ.வ.எண்.194/2013 என்ற வழக்கை பற்றியும், அதில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டது பற்றியும் சங்கதிகளை மறைத்து நாங்கள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால், எடுத்த எடுப்பிலேயே எங்கள் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால், சரியல்ல.

5) இவ்வழக்கில் எந்த பிரதிவாதிகள் பரிலுரை தாக்கல் செய்து அதை யார் யார் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. மேற்படி பதிலுரையில் பிரதிவாதிகள் என்ன சொல்லியுள்ளனர் என எனக்கு தெரியுமா என்றால், தடம் கேட்டுத்தான் பதிலுரை தாக்கல் செய்துள்ளனர். வேறு என்ன சொல்லியுள்ளனர் என எனக்கு தெரியாது.

6) என் முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்னர் பதிலுரையில் என்ன சொல்லியுள்ளது என்ற சங்கதிகளை நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. கடந்த 04.08.2016 ம் தேதியிலேயே பிரதிவாதிகள் தங்களது பதிலுரையில் மேற்படி அ.வ.எண்.194/2013 என்ற வழக்கை பற்றியும், அதில் நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்தது பற்றியும், மேற்படி அறிக்கைக்கு எங்கள் தரப்பில் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்பது பற்றியும் சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். ஆனால் அது தவறானது. மேற்படி பதிலுரையை மறுத்து எங்கள் தரப்பில் இவ்வழக்கில் மறுப்புரை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.